**OS.No.196/2021 P.W.1-சொர்ணகௌரி 27.02.2026**

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

20.06.2018 தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் 2வது பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அசல் வா.சா.ஆ.1. 02.07.2018 தேதியிட்ட 2வது பிரதிவாதியின் வழக்கறிஞர், வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.2. 07.07.2018 தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் 2வது பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய சட்ட எதிருரை அசல் வா.சா.ஆ.3. 13.03.2020 மற்றும் 23.03.2020 தேதியிட்ட வாதி, 1வது பிரதிவாதிக்கு பிரச்சனைகளுக்கு தீர்வு காணக்கோரி அனுப்பிய கடிதங்கள் அசல் வா.சா.ஆ.4. 29.03.2020, 04.04.2010, 01.06.2020, 11.06.2010 ஆகிய தேதிகளில் 1வது பிரதிவாதியால் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டதற்கான அவதூறு அறிவிப்புகள் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5. 27.07.2020 தேதியிட்ட வாதி வழக்கறிஞர், 1 மற்றும் 2வது பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு பலகையில் அறிவிப்புகளால் ஏற்படும் சேதங்கள் குறித்த சட்ட அறிவிப்பு அசல் வா.சா.ஆ.6. 30.07.2020 தேதியிட்ட வாதி செயிண்ட் தாமஸ் மௌண்ட் காவல் நிலையத்தில் கொடுத்த ஆன்லைன் புகார் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7. 03.08.2020 தேதியிட்ட 1 மற்றும் 2வது பிரதிவாதிகளின் வழக்கறிஞர்கள் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் மறுப்பு அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8. 28.08.2020 தேதியிட்ட வாதி வழக்கறிஞர், பிரதிவாதிகளின் வழக்கறிஞர்களுக்கு அனுப்பிய எதிருரை அறிவிப்பு அசல் வா.சா.ஆ.9. பிப்ரவரி 2021-ல் வாதி 1வது பிரதிவாதிக்கு ரூ.21,600/- செலுத்தியதற்கான கணக்கு அறிக்கை சான்று அசல் வா.சா.ஆ.10.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)